# 3. உத்தரமேரூர் குடவோலைமுறை கல்வெட்டு

## A

1. ஸ்வஸ்திஸ்ரீ () மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மர்க்கு யாண்டு பனிரண்டு ஆவது () உத்திரமேருச்சதுர்வேதி மங்கலத்து சபையொம் இவ்வாண்டு முதல் எங்களூர் ஸ்ரீ முகப்படி ஆஞை

2. யினால் தத்தனூர் மூவேந்த வேளான் இருந்து வாரியமாக ஆட்டொருக்காலும் ஸம்வத்ஸர வாரியமும் தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் இடுவதற்கு வ்யவஸ்தை செய் –

3. த பரிசாவது () குடும்பு முப்பதாய் முப்பது குடும்பிலும் அவ்வவ குடும்பிலாரேய் கூடி காநிலத்துக்கு மேல் இறை நிலமுடையான்தன் மனையிலே அ –

4. கம் எடுத்துக்கொண்டு இருப்பானை அறுபது பிராயத்துக்கு உள் முப்பது பிராயத்துக்கு மேல்பட்டோர் வேதத்திலும் சாஸ்திரத்திலும் காரியத்திலும் நிபுணரென்னப்பட்டி–

5. ருப்பாரை அர்த்த கௌசமும் ஆத்ம கௌசமும் உடையராய் மூவாட்டின் இப்புறம் வாரியஞ் செய்திலாத்தார் வாரியஞ் செய்தொழிந்த பெருமக்களுக்கு

6. அணிய பந்துக்கள் அல்லாத்தாரைக் குடவோலைக்குப் பேர் தீட்டிச் சேரி வழியேய் திரட்டி பன்னிரண்டு சேரியிலும் சேரியால் ஒரு பேராமாறு ஏதுமுரு வறியாத்தானுரு

7. பாலனைக் கொண்டு குடவோலை வாங்குவித்துப் பன்னிருவாரும் ஸம்வத்ஸர வாரியமாவிதாகவும் () அதின் மின்பேய் தோட்ட வாரியத்துக்கு மேற்படி குடவோ --

8. லை வாங்கிப் பன்னிருவரும் தோட்ட வாரியமாவதாகவும் () நின்ற அறு குடவோலையும் ஏரி வாரியமா –

9. வதாகவு முப்பது குடவோலை பறிச்சு வாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியமும் முன்னூற்றுபது நாளும் நிறம்ப வாரிபம் ஒழிந்த அனந்தரம் இடும்வாரியங்கள் இவ்யவஸ்தையோலைப்படியேய் குடும்புக்குக் குடவோலை இட்டுக் குடவோலை பறிச்சுக்கொண்டேய் வாரியம் இடுவதாகவும் () வாரியஞ் செய்தார்க்கு பந்துக்களும் சேரிகளில் அந்யோந்யம்மே *****

10. ம் குடவோலையில் பேர் எழுதி இடப்படாதாராகவும் () பஞ்சவார வாரியத்துக்கும் பொன் வாரியத்துக்கும் முப்பது குடும்பிலும் முப்பது குடவோலை இட்டு சேரியால் ஒருத்தரைக்குடவோலை பறித்து பன்னிருவாரிலும் அறுவர் பஞ்சவார வாரியமாவதாகவும் () அறுவர் பொன்வாரியமாவதாகவும் () ஸம்வத்ஸர வாரியம் அல்லாத்த

11. வாரியங்கள் ஒருக்கால் செய்தாரை பின்னை அவ்வாரியத்துக்கு குடவோலை இடப்பெராததாகவும் ( ) இப்பரிசே யிவ்வாண்டு முதல் சந்திராதித்தவத் என்றும் குடவோலை வாரியமேய் இடுவதாக தேவேந்திரன் சக்ரவர்த்தி ஸ்ரீ வீரநாராபணன் ஸ்ரீ பராந்தகதேவராகி பரகேசரிவர்மர் ஸ்ரீமுகம் அருளிச் செய்துவரக்காட்ட –

12. ஸ்ரீ ஆஞையினால் தத்தநூர் மூவேந்த வேளானுடனிருக்க நம் கிராமத்து துஷ்டர் கெட்டு சிஷ்டர் வர்த்தித்திடுவாராக வ்யவஸ்தை செய்தோம் உத்தரமேருச் சதுர்வேதிமங்கலத்து சபையோம் ( ) *

# B

1. ஸ்வஸ்திஸ்ரீ () மதிரைகொண்ட கோபரகேசரிவர்மர்க்கு யாண்டு பதினலாவது நாள் பதினாலு () காலியூர்கோட்டத்து தன்கூற்று உத்தரமேரு சதுர்வேதி மங்கலத்து சபையோம் இவ்வாண்டு முதல் எங்களுக்கு பெருமானடிகள் எம்பெருமான் ஸ்ரீ வீரநாராயணன் ஸ்ரீ பராந்தகதேவன் ஸ்ரீ பரகேசரி வன்மருடைய ஸ்ரீமுகம் வரக்காட்ட ஸ்ரீமுகப்படி ஆ –

2. ஞையினால் சோழ நாட்டுப் புறங்கரம்பை நாட்டு ஸ்ரீவங்கநகர்க் கரஞ்சை கொண்டயக்ரமவித்த பட்டனாகிய சோமாசிப்பெருமான் இருந்து வாரியமாக ஆட்டொருக்காலும் ஸம்வத்ஸர வாரியமும் ஏரி தோட்ட வாரியமும் வாரியமும் இடுவதற்கு வ்யவஸ்தை சேத பரிசாவது () குடும்பு முப்பதா முப்பது குடும்பிலும் அவ்வவ குடும்பிலா –

3. ரே கூடிக் காநிலத்துக்கு மேல் இறை நிலமுடையான் தன் மனையிலே அகம்மெடுத்துக் கொண்டிருப்பானை எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டார் மந்த்ரப்ராஹ்மணம் வல்லான் ஓதுவித்தறிவானைக் குடவோலை இடுவதாகவும் () அரைக்கா நிலமே உடையநாயினும் ஒரு வேதம் வல்லானாய் நாலு பாஷ்யத்திலும் ஒருபா –

4. ஷ்யம் வக்காணித்தறிவான் அவனையுங்குடவோலை எழுதிப்புக இடுவதாகவும் () அவர்களிலும் கார்யத்தில் நிபுணராய் ஆசாரமுடையரானாரையேய் கொள்வதாகவும் () அர்த்த சௌசமும் ஆன்ம சௌசமும் உடையராய் மூவாட்டினிப் புறம் வாரியஞ் செய்திலாத்தாரை கொள்வதாகவும் () எப்பேர்ப்பட்ட வாரியங்களும் செய்து கணக்குக் காட்டாதே இருந்தாரையும் இவர்களுக்குச் சிற்றவைப் பேரவை ம –

5. க்களையும் இவர்களுக்கு அத்தை மாமன் மக்களையும் இவர்களுக்குத் தாயோடு உடப்பிறந்தானையும் இவர்கள் தகப்பனோடுடப்பிறந்தானையும் தன்னோடுடப் பிறந்தானையும் இவர்களுக்குப் பிள்ளைகுடுத்த மாமனையும் இவர்கள் ப்ராஹ்மணி யோடுடப்பிறந்தானையும் தன்னோடுடப்பிறந்தாளை வேட்டானையும் உடப்பிறந்தாள் மக்களையும் தன் மகளை வேட்ட மருகனையும் தன் தமப்பனையும்

6. தன் மகனையும் ஆக இச்சுட்ட * * * * * பந்துக்களையும் குடவோலை எழுதிப்புக இடப்பெறாத்தாராகவும் () அகம்யாகமனத்திலும் மகா பாதகங்களில் முன்படைந்த நாலு மகாபாதகத்திலும் மெழுத்துப்பட்டாரயும் இவர்களுக்கும் முன் சுட்டப்பட்ட இத்தினை பந்துக்களையும் குடவோலை எழுதிப்புக இடப்பெறாதாராகவும் () ஸம்ஸர்க்கபதிதரை ப்ராயஸ்சித்தஞ் செய்யுமளவும்–

7. குடவோலை இடாததாகவும் * * * * * தியும் சாஹசியாயிருப்பாரையும் குடவோலை எழுதிப் புகவிடப்பெறாதாராகவும் () பரத்ரவ்யம் அபஹரித்தானையும் குடவோலை எழுதிப் புகவிடப்பெறாதாராகவும் () எப்பேர்ப்பட்ட கையூட்டுங்கொண்டான் க்ருதப்ராயஸ்சித்தஞ் செய்து சுத்தரானாரையும் அவ்வவர் ப்ராணாந்திகம்

8. வாரியத்துக்குக் குடவோலையெழுதி புகவிடப்பெறாததாகவும் * * * * * பாதகம் செய்து ப்ராயச்சித்தஞ் செய்து சுத்தரானாரையும் க்ராம கண்டகராய் ப்ராயஸ் சித்தஞ் சேது சுத்தரானாரையும் அகம்யாகமனம் சேது ப்ராயஸ்சித்தஞ் செய்து சுத்தரானாரையும் ஆக இச்சுட்டப்பட்ட அனைவரையும் ப்ராணாந்திகம் வாரியத்துக்குக் குடவோலை எழுதிப் புகவிடப்பெறாததாக –

9. வும் () ஆக இச்சுட்டப்பட்ட இத்தனைவரையும் நீக்கி இம்முப்பது குடும்பிலும் குடவோலைக்குப் பேர்தீட்டி இப்பன்னிரண்டு சேரியிலுமாக இக்குடும்பும் வெவ்வேறேய் வாயோலை பூட்டி முப்பது குடும்பும் வெவ்வேறே கட்டிக் குடம்புக இடுவதாகவும் () குடவோலை பறிக்கும்போது மஹாசபைத் திருவடியாரை சபாலவ்ருத்தம் நிரம்பக் கூட்டிக்கொண்டு அன்றுள்ளூரில் இருந்த நம்பிமார் ஒருவரையும் ஒழியா –

10. மே மஹாசபையிலே உள்மண்டகத்திலேய் இருத்திக்கொண்டு அந்நம்பிமார் நடுவேய் அக்குடத்தை நம்பிமாரில் வ்ருத்தராய் இருப்பாரொரு நம்பி மேல் நோக்கி எல்லாஜ் ஜனமுங் காணுமாற்றலெடுத்துக்கொண்டு நிற்க பகலேயந்தர மறியாதானொரு பாலனைக்கொண்டு ஒரு குடும்பு வாங்கிய் மற்றொரு குடத்துக் கேய் புகவிட்டுக் குலைத்து அக்குடத்திலோரோலை வாங்கி மத்யஸ்தன் கையிலே

11. குடுப்பதாகவும் () அக்குடுத்தவோலை மத்யஸ்தன் வாங்கும்போது அஞ்சு விரலும் அகல வைத்து உள்ளங்கையிலே ஏற்றுக்கொள்வானாகவும் () அவ்வேற்று வாங்கின வோலை வாசிப்பானாகவும் () வாசித்த அவ்வோலை அங்குள் மண்டகத்திருந்த நம்பிமார் எல்லாரும் வாசிப்பாராகவும் () வாசித்த அப்பேர் தீட்டுவதாகவும் () இப்பரிசே முப்பது குடும்பிலும் ஒரோ பேர் கொள்வதாகவும் () இக்கொண்ட முப்பது பேரிலும் தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் செய்தாரையும் விஜ்யா வ்ருத்தரையும்

12. வயோ வ்ருத்தர்களையும் ஸம்வத்ஸரவாரியராக கொள்வதாகவும் () மிக்கு நின்றாருட் பன்னிருவரைத் தோட்ட வாரியங் கொள்வதாகவும் () நின்ற அறுவரையும் ஏரி வாரியமாகக் கொள்வதாகவும் () இவ்விரண்டு திறத்து வாரியமும் கரை காட்டிக்கொள்வதாகவும் () இவாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியப் பெருமக்களும் முன்னுற்றறுபது நாளும் நிரம்பச் செய்து ஒழிவதாகவும் () வாரியஞ் செய்யா நின்றாரை அப்ராதங் –

13. கண்டபோது அவனை யொழித்துவதாகவும் () இவர்கள் ஒழிந்த அனந்தரமிடும் வாரியங்களும் பன்னிரண்டு சேரியிலும் தன் மக்ருத்யங்கடைக்காணும் வாரியரே மத்யஸ்தரைக்கொண்டு குறிகூட்டிக் குடுப்பாராகவும் () இவ்பவஸ்தை யோலைப் படியேய் * * * க்குக் குடவோலை பறித்துக்கொண்டே வாரியம் இடுவதாகவும் () பஞ்சவார வாரியத்துக்கும் பொன் வாரியத்து –

14. க்கு முப்பது குடும்பிலும் குடவோலைக்கு பேர் தீட்டி முப்பது வாயோலை கட்டும் புக இட்டு முப்பது குடவோலை பறித்து முப்பதிலும் பன்னிரண்டுபேர் பறித்துக் கொள்வதாகவும் () பறித்த பன்னிரண்டிலும் அறுவர் பொன் வாரியம் அறுவர் பஞ்சவார வாரியமும் ஆவனவாகவும் () பிற்றை ஆண்டும் இவ்வாரியங்கள் குடவோலை பறிக்கும்போது இவ்வாரியங்களுக்கு முன்னம் செ –

15. ய்த குடும்பன்றிக்கே நின்ற குடும்பிலே கரை பறித்துக்கொள்வதாகவும் () கழுதை ஏரினாரையும் கூடலேகை செய்தானையும் குடவோலை எழுதிப்புக இடப்பெறாதாகவும் () மத்யஸ்தரும் அர்த்த சௌசமுடையானே கணக்கெழுதுவானாகவும் கணக்கெழுதினான் கணக்குப் பெருங்குறிப் பெருமக்களோடு கூடக் கணக்கு காட்டி சுத்தன் ஆச்சிதின் பின்னன்றி மற்றுக்கண் –

16. க்குப்புக பெறாதானாகவும் () தான் எழுதின கணக்குத் தானே காட்டுவானாகவும் () மற்றுக் கணக்கர் புக்கு ஒடுக்கப்பெறாதாராகவும் () இப்பரிசே இவ்வாண்டு முதல் சந்திராதித்யவத் என்றும் குடவோலை வாரியமே இடுவதாக தேவேந்திரன் சக்ரவர்த்தி பண்டிதவத்ஸலன் குஞ்சரமல்லன் சூர சூளாமணி கல்பகசரிதன் ஸ்ரீ பரகேசரிபன்மர்கள் ஸ்ரீமுகமருளிச்சேது வரக்காட்ட ஸ்ரீ ஆஜ்ஞையா –

17. ல் சோழ நாட்டுப் புறங்கரம்பை நாட்டு ஸ்ரீ வங்கநகர்க் கரஞ்சை கொண்டயக்ரம வித்த பட்டனாகிய சோமாசிப் பெருமானுடன் இருந்து இப்பரிசு செய்விக்க நம் க்ராமத்துக்கு அப்யுதயமாக துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வர்த்திப்பதாக வ்யவஸ்தை செய்தோம் உத்தரமேரு சதுர்வேதிமங்கலத்து சபையோம் () இப்பரிசு குறியுள் இருந்து பெருமக்கள் பணிக்க வ்யவஸ்தை எழுதினேன் மத்யஸ்தன்

18. காட்டிப் போத்தன் சிவக்குறி இராஜமல்ல மங்கலப்ரியனேன் () *